# CHAPTER – 44

# இலக்கியத்தில் நாடகமரபும் அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியும்

**முனைவர் து. உமாமகேஸ்வரி**
நாடகத் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

இலக்கியங்கள் அகம் என்பது காதற் செய்திகளையும் புறம் என்பது வீரச்செய்திகளையும் குறிப்பிடுகின்றன. மனித ஒழுக்கத்தின் இருபெரும் பிரிவுகளாக அமைந்த காரணத்தால் காலப்போக்கில் இவ்விரண்டும் பல துணைக்கருத்துக்களை தம்முள் சேர்த்துக் கொண்டுள்ளன. இலக்கிய மரபுகளைப் பொருத்தவரை தொல்காப்பியம் போன்ற இலக்கணங்களின் செல்வாக்கால் அகம் புறம் என்ற இரு பிரிவுகள் அடிப்படையில் வளர்ச்சிப்பெற்றுத் திகழ்கிறது. 'மரபு' என்னும் சொல் பழமை, முறைமை, பரம்பரை, பண்பு போன்ற பொருட்களைக் கொண்டது. எந்த உயிரினத்திற்கும் பழமையும், வாழும் முறையும்; வழி வழியாக வரும் பரம்பரைத் தன்மையும்; பண்பும் உள்ளன.இலக்கியம் வாழ்விலிருந்து மலர்ந்தது ஆதலின் அதுவும் மரபுடையது. இலக்கியம் நுகர்வோர்க்கு மரபு பற்றிய அறிவு இன்றியமையாதது. இலக்கியம் ஆராய்வோர்க்கும் அந்த அறிவு இன்றியமையாதது என்று பெருந்தகை மு. வரதராசனார் அவர்கள் இலக்கிய மரபு என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.[1] இத்தகைய நாடக மரபு, தொழில் நுட்பத்தால் பெற்ற வளர்ச்சியை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**சங்க இலக்கியங்களில் நாடக மரபு:**

தமிழ் நாடக மரபு என்பது ஒவ்வொரு மொழிக்கும் ஒரு மரபு உண்டு என்பதைப் போல தமிழ் மொழிக்கு உள்ள மரபை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. தமிழ் நாடக மரபுகள் சங்க இலக்கிய அகப்பாடல்களில் மிகுதியாக காணப்படுகின்றன. சங்கப் புலவர்கள் தங்கள் கற்பனைகளை தலைவன், தலைவி, தோழி, பாங்கன் போன்றோர் வாயிலாகப் தங்கள் உணர்ச்சிகளைப் பதிவு செய்துள்ளனர். அவர்கள் பேசாமல் மறைந்திருக்க, தாம் படைத்த கற்பனை மாந்தர்கள் வழி; பேசுகின்றனர். இத்தகைய பாட்டுக்கள் நாடகப்பாடல்கள் ஆகும். வின்செஸ்டர் என்பவர் நாடகப் பாங்கமைந்தப் இலக்கியப் பாடல்களை, நாடகத் தன்னுணர்ச்சிப் பாட்டு நாடகக் கதைப்பாட்டு, நாடகத் தனிமொழிப்பாட்டு என மூவகையாக பாகுபாடு செய்துள்ளார். நாடகத் தன்னுணர்ச்சிப் பாட்டுக்கு சான்றாக, புறநானுற்று பாரி மகளிர் பாடிய பாடல், அன்றைய திங்களில் அந்த வெண்ணிலவுக் காலத்தில் எம் தந்தையும் உடையவராய் இருந்தோம். எமது பறம்பு மலையையும் பிறர் கைப்பற்றவில்லை இன்றைய திங்களில் மூவேந்தர்கள் எமது மலையையும் வென்று, பாரியையும் அழித்த செய்தியையும் அவர்கள் வருந்திக் கூறுவதை

**அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின் எந்தையு முடையேமெங்**
**குன்றும் பிறர்கொளார் இற்றைத்திங்கள் இவ்வெண் ணிலவின் வென்றெறி**
**முரசின் வேந்தரெங் குன்றுங் கொண்டார்யாம் எந்தையு மிலமே (புறம்–112).**

என்ற பாடல்வழி தங்கள் துன்ப உணர்ச்சியை நாடகத் தன்மையோடு வெளிப்படுத்துவதை அறிய முடிகின்றது.

**நாடகக் கதைப்பாட்டு**

சங்க இலக்கியத்தில் நாடகக் கதையமைந்த பாடல்கள் நிரம்பக் காணப்படுகின்றன். கலித்தொகையில் இவ்வகைத் தன்மையை, செவிலி உடன் போகியத் தலைவியை தேடி வழியில் தென்பட்ட அந்தணரை வினவ, அவரும் அவளைக் கண்ட செய்தியினையும் கூறி, மணம் தரும் சந்தனமும், பெருமைப் பொருந்திய முத்தும், ஏழிசைப் பெறுகின்ற யாழின் இசையும் அவைகள் பிறந்த இடமான மலை, கடல், யாழ் போன்றவற்றிற்கே சொந்தம் என்பதையும் உம் மகளும் தலைவனுக்கே சொந்தம் என்பதனையும் உணர்த்தி, உரிய இடத்தில்தான் சேர்ந்துள்ளாள் என்றும், அவளை எண்ணி வருந்த வேண்டாம் எனவும் ஆறுதல் மொழிகளைக் கூறுவதாகவும்

**எறித்தரு கதிர் தாங்கி ஏந்திய குடைநீழல் ஊறித்தாழ்ந்த கரகமும் உரைசரன்ற முக்கோலும் நெறிப்படச் சுவலசை, வேறோரா நெஞ்சத்துக் குறிப்பேவல் செயல்மாலைக் கொளைநடை யந்தணீர் வெவ்விடைச் செலல்மாலை யொழுக்கத்தீ ரிவ்விடை (கலி.9)**

என்ற பாடல்வழி செவிலிக்கு அந்தணர் கூறும் செய்திகள் ஒரு கதை வடிவில் அமைந்துள்ள செய்தியினை மேற்குறிப்பட்ட கலித்தொகை பாடல், நாடகத்தைப் பாட்டுக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். **நாடகத் தனிமொழிப் பாட்டு** நாடகத் தனிமொழிப்பாட்டுக்குச் குடவாயில் கோசசெங்கணானால் சிறைப்பட்ட சேரமான் கணைக்காலிரும் பொறை, நீர் வேட்கையால், சிறைக்காவலரை நீர் வேண்டி காலம் தாழ்த்தப் பட்டமையால் நீரைப் பெறாது உயிர் நீத்தான். அப்பொழுது தன்னிலைக்குத் தானிரங்கிப் பாடியதனை, அமைகிறது.

**குழவி யிறப்பினும் ஊன்தடி பிறப்பினும்**
**ஆளன் றென்று வாளிற் றப்பார்**
**தொடர்ப்படு ஞமிலியின் இடர்ப்படுத் திரீஇய கேளல் கேளிர் வேளாண்**
**சிறுபதம் மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணிய**
**தாமிரந் துண்ணு மளவை**
**ஈன்மரோ இவ்வுலகத்தானே. (புறம். 74)**

என்ற பாடல்வழி பழந்தமிழர் தம் விழுப்புண் வேட்கையையும், போர்க்களத்தில் அழிதலையும் உணர்த்துவதையும், நாடகத் தனிமொழிப் பாட்டுக்கு புறநானூற்றுப் பாடல் சரியான எடுத்துக்காட்டு என்பதையும் அறிய முடிகின்றது. வாழ்க்கையைப் பற்றி எழுதப் பெறுவதே இலக்கியம். இவ்வாறு இலக்கியங்கள் நாடகத்தன்மையுடன் அமைத்தமையை சான்றுகள் வாயிலாக அறிய முடிகின்றது. தொல்காப்பியம் சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முற்பட்ட இலக்கண நூல், அந்நூலுள் இலக்கிய மரபுகளைப் பற்றிய செய்திகளாக,

**நாடக வழக்கிலும் உலகியல் வழக்கிலும்**
**பாடல் சான்ற புலனெறி வழக்கம் (தொல்.பொரு.அகம்.53)**

என்னும் நூற்பா வாயிலாகக் கற்பனையும் உண்மையும் கூடிய இலக்கிய மரபைத் தொல்காப்பியர் உணர்த்தியுள்ளார்.

**மரபுநிலை திரிதல் செய்யுட்டு இல்லை மரபுவழிப் பட்ட சொல்லினான**
**மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும் (தொல்.பொரு.மரபு. 91, 92)**

என்னும் விதிகள் வாயிலாகத் தெளிவாக்கியுள்ளார். உணர்ச்சிகளை எட்டு வகையான மெய்ப்பாடுகள் மூலம் தொல்காப்பியர், மெய்ப்பாட்டியல் என்னும் பகுதியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிற்காலத்தில் சாந்தம் என்பதனை எட்டோடு ஒன்பது சுவைகளுடன் நாடகங்கள் அமைத்தல் என்பது வடமொழி நூலாரின் கோட்பாடு ஆகும்.

**சிலப்பதிகாரச் செய்திகள் :**

சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் சிறந்த நாடகக் காப்பியமாக இயற்றப்பெற்ற தமிழின் ஒப்பற்ற முதற் காப்பியம் ஆகும். நாட்டியம் பற்றிய செய்திகள் நாடகக்கலைக்கும் உரியன என்பதால் மாதவி 'நாடகக்கணிகை' என்றே குறிக்கப்பெறுகின்றாள். அக்காலத்தில் பழைய கதைகளும் புராணங்களும் நாட்டியத்தின் வாயிலாக நடனக்கலையில் சிறந்தோழ வாயிலாக மெய்ப்பாடுகளுடன் மக்களுக்கு ஆடிக்காட்டப்பட்டன. அவள் பதினொரு வகையான ஆட்டங்களில் தலைச்சிறந்தவளாக விளங்குகிறாள். அவளது ஆடல்கலை மாண்பை உணர்த்துவதற்கு இளங்கோவடிகள் 'அறங்கேற்றுக் காதை' என்னும் ஒரு காதையையே அமைத்துள்ளார் என்பதின் வாயிலாக நாடகக் கலை வலுப்பெற்றிருந்தமை நன்கு அறிய முடிகின்றது.

பிற்காலத்தில் குறவஞ்சி நாடங்களும் பள்ளு நாடகங்களும் சிலப்பதிகாரம் உணர்த்திய நாடக இனங்களின் மரபைச் சார்ந்தவை என்பது திண்ணம்.

**மூவகை நாடகம்**

நாடகங்களை

1. நடிப்பதற்கு மட்டும் உரிய நாடகங்கள்
2. படிப்பதற்கு மட்டும் உரிய நாடகங்கள்
3. நடிப்பதற்கும் படிப்பதற்கும் ஒருங்கே உரிய நாடகங்கள் என மூவகையாக பிரிக்கப்பட்டுள்ளன.

மொழிக்கு வரிவடிவம் தோன்றி இலக்கியங்கள் அமைந்த பிறகு படிப்பதற்கு மட்டுமே உரிய நாடகங்கள் தோன்றியிருத்தல் வேண்டும். தொடர்நிலைச் செய்யுளாக அமைந்த சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, இராமகாதை, பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், வில்லிபாரதம் முதலிய காப்பியங்களாகவும் அமைந்து அவை படிப்பதற்கு மட்டுமே உரிய நாடகத்தன்மையுடன் விளங்கி வருகின்றன. மனோன்மணியம் படிப்பதற்கு என்று சொல்லப் பெற்றாலும் கடினமான பயிற்சிக்குப் பிறகு நடிக்கக் கூடிய நாடகமே எனத் தோன்றுகிறது. நடிப்பதற்கும் படிப்பதற்கும் உரிய நாடகங்கள் முழுமையான நாடகத் தன்மையுடையவை. உலக அனுபவமும் நடிப்புத்திறனும் கற்பனை வளரும் இலக்கிய அறிவும் உடையவர்கள் நடித்தற்கும் படித்தற்கும் உரிய நாடகங்களை உருவாக்க முடியும் என்பதை இலக்கியங்களின் வாயிலாக அறியலாம்.

**நாடகத் தொழில் நுட்பம்**

பழங்காலத்தில் விழாக்காலங்களில் நாடகங்கள் நடிக்கப்பட்டன. கோவில்களிலும் அரண்மனைகளிலும் நடிக்கக்கட்டு பின்பு அரங்க மேடைகளில் பாடி ஆடித் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் போது பல ஒலிகளின் இரைச்சலால் இரசிகர்களின் செவி நுகர்ச்சியைப் பாதிக்கத் தொடங்கியமையால் இத்தொல்லையை நீக்குவதற்கு தொழில் நுட்பக்க கருவிகள் பெரிதும் பயன்படுகின்றன. கலையரங்க மேடையில் ஒலிகளைத் தம்பால் இழுத்துக் கொண்டு பின்பு அவற்றை சிதைவில்லாமல் இரசிகர்களின் செவிக்கு கேட்கப்படும் நுண்கருவிகளான (மைக், ஆம்ப்ளிஃபையர், ஸ்பீக்கர்,லைட்டிங் செட்டிங்ஸ்) முதலிய கருவிகளும் பஞ்சணை நாற்காலிகள்

நேராக உட்காரவதற்கும், வேண்டியபோது சாய்து கொள்வதற்கும் ஏற்றவாறு அமைக்கப்படுகிறது. அன்றாடம் பொருள் ஈட்டுதலே குறிக்கோளாக வாழும் மக்கள் தங்களின் மன அழுத்தத்திலிருந்து விடுபடுவதற்கு நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகள் உதவி புரிகின்றன. தொழில் நுட்பங்கள் வாயிலாக புதுப்புதுக் கருவிகளைப் பயன்படுத்தி அவர்களைக் கவர்வதற்குரிய வழி வகுத்து சிறந்த படைப்புக்களின் மூலம் மனநிறைவடையச் செய்வதே இதன் நோக்கம் எனலாம்.

இன்றைய சூழலில் சமுதாயக் கருத்துக்களையும், விழிப்புணர்வு கருத்துக்களையும், சமுதாயப் பிரச்சனைகளையும் நாடகங்களின் வாயிலாக பதிவு செய்கின்றனர். மனிதன் தனது திறமைகளை வெளிப்படுத்த நவீனக்கருவிகளை புதிய தொழில் முறை உத்திகளால் பயன்படுத்துகின்றான். தொழிற் நுட்பம் பெருகியுள்ள இக்காலத்தில் தொலைக்காட்சி வாயிலாக நாடகங்கள் உலக மக்கள் பலநாடுகளில் கண்டு வரும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. எனவே, பணம் ஈட்டுவதற்காக விளம்பரங்களின் வாயிலாக ஆண்டுகனக்கில் தொடர நாடகங்கள் நீட்டிக்கும் போது அதன் சுவை குன்றுகிறது. எந்த நாடகமாக இருந்தாலும் அளவுடன் அமைதல் நலம். தங்கள் வாழ்க்கையில் பேசும் போது தாங்கள் அறிந்த பாடல்களையோ, சில வரிகளையோ எடுத்துச் சொல்லுதல் இயல்பு. இலாவணி என்னும் தழக்கப்பாட்டு இந்தியில் முறையே ஆடவர் – பெண்டிர் அணிகளுடையே இன்றும் பாடப்பெற்று வருதலைக் காணலாம். இந்த மரபு திரைப்படங்களிலும் புகுந்துவிட்டது எழுபதுகளில் நாடகங்களுக்கே முதலிடம் வழங்கிய சபாக்கள் இன்று மெல்லிசைக்கே வாய்ப்பு வழங்கப்படுகின்றன. சென்னையில் நாடகங்கள் நடைபெறுவது என்பது அத்திப் பூவாக உள்ளன. தொலைக்காட்சித் தொடர்கள் நாடகத்தின் நலிவிற்க்கு காரணம் என்ற கருத்திற்கு உண்மையில் தரமான நாடகம் இன்மையே காரணம் எனலாம். இன்று துளிர் விட்டுக் கொண்டிருக்கின்ற நவீன நாடகம் ஒரு சிறு வட்டத்துக்குள்ளேயே உள்ளது. மக்கள் மன்றத்தில் இன்னும் அது தன் சுவட்டை முழுமையாகப் பதியவில்லை. இப்போது பல குடும்பங்களில் தொலைக்காட்சியின் ஆளுமையே மக்களை ஆட்டிவைக்கும் பொம்மையாக செயல்பட வைக்கிறது.

**முடிவுரை**

நாடகம் இலக்கிய மரபைக் காக்கும் பெட்டகம் என்பதற்கு இலக்கியங்கள் உரையாடல்களிலும் பாடல்களிலும் புகுத்தியுள்ளமை சான்றாகும். மக்கள் கற்றவர்கள் மற்றும் இலக்கியப் பயிற்சி மிக்கவர்கள். நாடகம் சிறந்த கதையமைப்புடன் குறிக்கோளுடன் அமைந்தால் அதில் இடம்பெறும் நகைச்சுவைக் காட்சிகளுக்கு மதிப்பேற்படும். நாடகச்சுவையை உயர்த்துவதற்கு நகைச்சுவை துணை நிற்க வேண்டும். இன்று திரு.சோ, திரு.மௌலி முதலிய நகைச்சுவை நாடக ஆசிரியர்கள் தமிழ்நாடக வாழ்வியல் மரபுக்குச் சிறந்த தொண்டாற்றி வருகின்றனர். மற்றும் சிலர் பால் உணர்ச்சி மிக்க இருபொருள் நகைச்சுவை உரையாடல்கள் அமைத்து நாடக மரபையும் வாழ்வியல் மரபை சீரழித்து வருகின்றன. திரைப்படங்களும் நாடகங்களின் தொடர்ச்சியே தொலைக்காட்சித் தொடர் நாடகங்களும் தொழிற் நுட்பத்தின் வளர்ச்சியே. இலக்கியக் காலக்கட்டத்தில் இலக்கியம் பதிவுகள் செய்துள்ள சான்றுகள் வழியும், தொழில் நுட்ப வளர்ச்சியினால் நாடக செழுமையும் வீழ்ச்சியும் மேற்கூறியவற்றால் அறிய முடிகின்றது.

## *துணை நூல்கள்:*

1.செம்மொழித்தமிழ்(புறநானூறு), தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, முதற்பதிப்பு, சூன் 2010.

2.செம்மொழித்தமிழ்(கலித்தொகை), தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, முதற்பதிப்பு, சூன் 2010.

3.செம்மொழித்தமிழ்(தொல்காப்பியம்), தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, முதற்பதிப்பு, சூன் 2010.